**நிதி அமைச்சர் திரு. க.அன்பழகன் அவர்கள், 2006–2007 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டமன்றப் பேரவையில் வழங்கி, 2006 –ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 –ஆம் நாளன்று ஆற்றும் உரை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

2006–2007 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 1,157.95 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூபாய் 495.15 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 662.80 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2006–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22– ஆம் நாளன்று 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவு திட்டம் சட்டப் பேரவையில் தாக்கல்

செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப்பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்படும் உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களை சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு ஈடு செய்யப்படும்.

3. மீன்பிடித் தொழில் அதிகம் இல்லாத மாதங்களில் 1,02,993 மீனவ மகளிருக்கு உதவித் தொகை வழங்குவதற்காக அரசு ரூபாய் 12.36 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 12.36 கோடி

வழங்கப்பட்டுள்ளது. மானியக் 'கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீனவளத் துறை – மீன்வளம்' என்பதன் கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதால் உள்ளாட்சியமைப்புகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட அரசு முடிவு செய்துள்ளது. மானியக் 'கோரிக்கை எண் 10 – வணிகவரி மற்றும் பதிவுத் துறை – வணிக வரிகள்' என்பதன் கீழ் ரூபாய் 30.00 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. ஏழைக் குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் மற்றும் அடுப்புகள் வழங்குவதற்காக அரசு ரூபாய் 60.00 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 60.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

6. விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கடனாக ரூ 200.00 கோடி வழங்குவதற்கு அரசு அனுமதித்துள்ளது. ‘மானியக் கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு’ என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 200.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பங்கு மூலதன உதவி வழங்குவதற்காக ரூபாய் 150.00 கோடி ‘மானியக் கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை’ என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. கரும்புக்கான உயர்த்தப்பட்ட மாநில அரசின் பரிந்துரை விலையை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு ரூபாய் 89.02 கோடி நிதி உதவி வழங்குவதற்காக ‘மானியக் கோரிக்கை எண் 27 – தொழில் துறை’ என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. அடிப்படை வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு தன்விருப்ப மானியமாக அரசு ரூபாய் 56.51 கோடி அனுமதியளித்துள்ளது. மேலும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு தொகுதிக்கான ஒதுக்கீட்டை ரூபாய் 1.00 கோடியிலிருந்து ரூபாய் 1.20 கோடியாக அரசு உயர்த்தியுள்ளது. 'கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 103.51 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

10. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் திருமண நிதி உதவிக்கான கூடுதல் ஒதுக்கீடாக, மானியக் 'கோரிக்கை எண். 45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூபாய் 10.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாணவர்களுக்கான பயண அனுமதிக்குரிய பேருந்துக் கட்டணத்தை மாநிலப்

போக்குவரத்து நிறுவனங்களுக்கு அளிப்பதற்காக, மானியக் 'கோரிக்கை எண் 48 – போக்குவரத்துத் துறை' என்பதன் கீழ் ரூபாய் 100.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

12. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007–ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

**வணக்கம்**

**க.அன்பழகன்**
நிதி அமைச்சர்

சென்னை
2006–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6–ஆம் நாள்
விய, கார்த்திகைத் திங்கள் 20–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2037.